**செய்தி வெளியீடு எண்: 779** **நாள்:20.10.2020**

**செய்தி வெளியீடு**

வாக்காளர் தேர்தல் நடைமுறையில் பங்கேற்க முறையான அறிவூட்டல் (SVEEP) என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக நடைபெறவிருக்கும் 2021–ம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் பொது மக்களின் பங்கேற்பை அதிகரிக்க விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக மாநில அளவிலான இணையவழி வினாடி வினா போட்டி நடைபெறவிருக்கிறது. இப்போட்டியில் ஆர்வமுள்ள பொதுமக்கள் அனைவரும் பங்கேற்கலாம்.

இப்போட்டியில் அனைத்து சுற்றுகளும் Goal Quiz sports" என்ற You Tube இணையவழி தளத்திலேயே நடத்தப்படும். இதில் பங்கேற்கும் ஆர்வமுள்ளவர்கள் நேரடியாகவே முதல் நிலைப்போட்டியில் கலந்து கொள்ளலாம். முதல் நிலைப் போட்டி மூன்று சுற்றுகளைக் கொண்டது. முதல்நிலைப் போட்டியின் விவரங்கள் பின்வருமாறு

| முதல்நிலைப் போட்டி | நேரம் | தேதி |
|---|---|---|
| முதல் சுற்று | மாலை 4 மணி | 25.10.20 |
| இரண்டாம் சுற்று | காலை 11 மணி | 26.10.20 |
| மூன்றாம் சுற்று | மாலை 4 மணி | 26.10.20 |

"Goal Quiz sports" என்ற YouTube தளத்தில் கருத்துக்களைத் தெரிவிக்கும் (comment section) பகுதியில் சரியான பதில்களை முதலில் பதிவிடும் நபரே பின்வரும் சுற்றுகளில் பங்கேற்க தகுதியானவர். ஒரு நபர் ஒருமுறை மட்டுமே பதிலைப் பதிவிட வேண்டும். மொத்தம் 36 குழுக்கள் அரையிறுதி சுற்றுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவர். அரையிறுதி மற்றும் இறுதி சுற்றுகள் பின்வரும் வார இறுதியில் நடத்தப்படும். அரையிறுதி மற்றும் இறுதி சுற்று குறித்த அறிவிப்பு போட்டியாளர்களுக்கு அறிவிக்கப்படும்.

தேர்தல் மற்றும் பொது அறிவு (முறையே 50%) சார்ந்து வினாடி வினா போட்டிகள் நடைபெறும். ஓர் அணி அதிகபட்சம் இரண்டு நபர்களைக் கொண்டதாக இருக்க வேண்டும். இப்போட்டி தொடர்பான பிற விவரங்கள் பின்வருமாறு:–

| | |
|---|---|
| போட்டி நடைபெறும் நாள் மற்றும் நேரம் | முதல்நிலைப் போட்டி – 3 சுற்றுகள்<br>முதல் சுற்று – மாலை 4 மணி – 25.10.20<br>இரண்டாம் சுற்று – காலை 11 மணி – 26.10.20<br>மூன்றாம் சுற்று – மாலை 4 மணி – 26.10.20 |
| நுழைவுக் கட்டணம் | அனுமதி இலவசம் |
| முதல் நிலைப்போட்டிகான You Tube இணையதள விவரம் | Goal Quiz Sports You Tube channel |
| பரிசுத் தொகை | முதல் பரிசு ரூ.50,000/–<br>இரண்டாம் பரிசு ரூ25,000/–<br>மூன்றாம் பரிசு ரூ.15,000/– |
| | முதல் நிலை மற்றும் அரை இறுதிப் போட்டிகளில் சரியான பதில் அளிப்போருக்கு ஆறுதல் பரிசு வழங்கப்படும். |

சத்யபிரத சாகு ,
தலைமைத் தேர்தல் அதிகாரி மற்றும்
அரசு செயலாளர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**